12.12.2024

அ.வ.எண். 5/2021

வாசா.1 - ராஜேஸ்வரி

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எனது வாக்குமூலத்தை உள்ள சங்கதிகளை தெரிந்துகொண்டு தான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு நன்கு தெரியும். என்னுடைய பூமி 756 புல எண்ணில் வருகிறது. புல எண்.956/3, 956/4 என்று சொன்னால் நினைவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராது வரைபடத்தின் படி தான் நிலையில் சொத்து உள்ளது. தாவா 1 வது அயிட்ட சொத்து என் தகப்பனாரின் பெயரில் உள்ள சொத்து என்றால் ஆமாம். தாவா 2 வது அயிட்ட சொத்து என் தாயாரின் பெயரில் கிரயம் வாங்கிய சொத்து என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 என் தகப்பனார் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சொத்து விவரத்தில் இருபுறமும் தென்வடல் 50 LINKS என சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு நினைவில்லை. சாட்சியிடம் ஆவணம் காட்டி படித்து பார்த்து கேள்வி கேட்டபோது ஆமாம் என்று சாட்சியம் அளிக்கிறார்.

மேற்படி தென்வடல் 50 LINKS மேல் எங்களுக்கு சொத்து எதுவும் பாத்தியம் இல்லை என்றால் ஆமாம். மேற்படி 50 LINKS என்ன அளவு, அடி கணக்கில் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி 50 LINKS எவ்வளவு அடி கணக்கு என்று தெரியாமல் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்து எங்களுடைய தென்வடல் நீளம் 1 வது அயிட்ட சொத்திற்கு 10 மீ. என்று குறிப்பிட்டு உள்ளார் அதை ஒப்பு கொள்கிறேனா அல்லது மறுக்கிறேனா என்றால் ஏற்றுகொள்கிறேன். என்னுடைய தென்வடல் அடி 33 என்றால் இல்லை அது 44 அடி. நான் சொல்வது தவறு என்றும் என் தகப்பனார் விலைக்கு வாங்கியது 33 அடி மட்டுமே என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக 44 அடி என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா1 வது அயிட்ட சொத்திற்கு புல எண் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

தாவா 1 வது மற்றும் 2 வது அயிட்ட சொத்தானது நத்தம் வகைப்பாடை சேர்ந்தது என்றும் அதற்கு மூல ஆவணங்கள் கூட்டு புல வரைபடம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வரைபடம் வழக்கு சொத்திற்கான கூட்டு புல வரைபடம் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் என் தரப்பில் நீதிமன்றத்தில் மேற்படி கூட்டு புல வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதை என்னால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அடுத்த முறை செய்கிறேன். கூட்டு புல வரைபடத்தில் உள்ள அளவுகள் தான் என்னுடைய சொத்திற்கான கட்டிடத்தில் உள்ள அளவும், பிரதிவாதியின் கட்டிடத்தில் உள்ள அளவும் என்றால் என்னுடைய பத்திரத்தில் உள்ளதை தான் நான் சொல்ல முடியும். புல எண்.955/3 என்ற புல எண் பொதுப்பாதை என்று கிராம வருவாய் ஆவணங்களில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல, அது எங்களுக்கான பாதை.

நீலாம்பூர் கிராம நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டில் புல எண்.955/3 என்பது 75 ச.மீ. என்று பொதுப்பாதை என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதை நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அயிட்டம் 1 வது சொத்திற்கு கிழபுறம் அயிட்டம் 2 வது சொத்து அமைந்துள்ளதா என்றால் நினைவில்லை. மேற்படி தாவா மாதிரி வரைபடத்தில் 1 வது அயிட்ட சொத்து மற்றும் 2 வது அயிட்ட சொத்து DEFG என்ற குறிப்பு செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு பகுதி முழுவதும் என்னுடைய சொத்து என்று காட்டிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். 1 வது அயிட்ட சொத்தானது 755/1 PART அல்லது புது புல எண்.955/4 என்றால் ஆமாம். தற்போதையை உட்பிரிவின் படி 1 வது அயிட்ட சொத்து பழைய புல எண்.755/1 PART என்பது தற்பொழுது 956/4 என உட்பிரிவாகியுள்ளதா என்றால் ஆமாம்.

மேற்படி 956/4, 956/5 ஆகிய சொத்துக்கள் நத்தம் வகைப்பாட்டில் உள்ளது என்றால் ஆமாம். 956/3 என்ற காலை 56 ச.மீ பொதுப்பாதை என்றாலும், அல்லது யார் பெயரிலும் பட்டா கொடுக்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

வா.சா.ஆ.22 ஆவணத்தில் 956/3 நத்தம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது யார் பெயரும் அதில் இல்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் அதில் என் தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 955 காலையானது 2வது அயிட்ட சொத்துக்குரியது என்றால் எனக்கு நினைவில்லை. 956/4 காலையில் தென்வடல் 10 மீ. தான் எங்களுக்கான இடம் என்றால் சரியல்ல. 956/4 காலைக்கு கிழபுறம் 2 வது அயிட்ட சொத்து உள்ளது என்றால் ஆமாம். 956/4 காலையில் கிழபுறம் 10 மீ உள்ளதாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 956/4 காலையில் வடபுறம் 7மீ. என்று அளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அளவுகளை நான் ஒப்புகொள்கிறேனா அல்லது மறுக்கிறேனா என்றால் இது பொறுத்து எனக்கு தெரியவில்லை.

நான் இது பொறுத்து எந்த சங்கதியும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி அயிட்டம் 1 வது சொத்தில் கிழமேல் LINKS அளவு 104 என்று உள்ளது என்று ஒப்பு கொள்கிறேனா என்றால் எனக்கு கிழமேல் அளவு சரியாக தெரியவில்லை. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் அயிட்டம் 1 வது சொத்தில் கிழமேல் அளவு 7 மீ, என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். மேற்படி அறிக்கையில் 956/5 காலையில் அயிட்டம் 2 வது சொத்தை பொறுத்து கிழபுறம் தென்வடல் அளவு 9.6 மீ என்று சர்வேயர் அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும்போது நானும் உடன் இருந்தேன். 956/3 காலை எங்களுடையது என்று கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 கிரய ஆவணம் தாவா சொத்திற்கானது என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 என் தாயார் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம்.

வா.சா.ஆ.2 மற்றும் 3ல் தாவா 2 வது அயிட்ட சொத்து 880 சதுரடி என்றால் பத்திரத்தில் அந்த அளவு குறிப்பிடப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. தாவா 2 வது அயிட்ட சொத்து 1 வது அயிட்ட சொத்திற்கு கிழபுறம் அமைந்துள்ளது என்றால் ஆமாம்.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/ராஜேஸ்வரி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur